விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 24 செவ்வாய்க்கிழமை (10.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 286


ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி பேச்சுக்கான சூழலை ஏற்படுத்துங்கள்

## ஜனாதிபதியிடம் இணைத் தலைமைகள் கோரிக்கை



வடக்குக் கிழக்கில் தொடரும் சகல இராணுவ நடவடிக்கைகளையும் முடிபுக்குக் கொண்டுவந்து திட்டமிட்டவாறு வார இறுதியில் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கான சூழலை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என ஜனாதிபதியை நேற்றுச் சந்தித்த இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்கள் வலியுறுத்திக் கேட்டுள்ளனர். அத்துடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் வரை மோதல் தவிர்ப்பை தற்காலிகமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் ஜனாதிபதியைக் கேட்டுள்ளனர். நாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்தும் பேச்சுக்களை ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் குறித்தும் இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப் பேச்சுக்கு ஜே.வி.பி. எதிர்ப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைக்கு ஜே.வி.பி. எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் மத்திய குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் வலையில் அரசாங்கம் சிக்கிக்கொண்டு பேச்சுக்கான நாளை தீர்மானித்துள்ளது.

அண்மைய இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பிலான பொய்மை உடைக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒடுக்குமுறைகளிலிருந்து அந்த மக்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

பயங்கரவாதமானது முழுமையாக ஒழிக்கப்படாமல் பேச்சுக்களை நடத்துவது சரியானது அல்ல. பேச்சுக்களுக்கு அரசாங்கம் முன்னர் நிபந்தனை விதித்தது. ஆனால் தற்போது நிபந்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## சாவற்காட்டில் வைத்து நேற்று மீன் வியாபாரி சுட்டுக் கொலை

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை சாவற்காட்டில் மீன் வியாபாரி ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. அவர் தனது வியாபார நடவடிக்கை முடிந்து வீட்டிற்கு சென்ற போது சாவற்காட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் 5 பிள்ளைகளின் தந்தையான மீன் வியாபாரியான சாவற்காட்டு புதிய வீட்டுத்திட்டத்தில் வசித்து வரும் செல்வராஜா இதயராஜா (வயது-28) என்பவராவார்.

சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை நடாத்திய மல்லாகம் நீதிவான் சறோஜினி இளங்கோவன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு மானிப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## தற்காலிக யுத்தநிறுத்தத்தை உடன் ஏற்படுத்த வேண்டும்

### கண்காணிப்புக் குழு வேண்டுகோள்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுகளை மீள ஆரம்பிக்கும் வகையில் இருதரப்பும் வலிந்த தாக்குதல்களையும் மோதல்களையும் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தோபினூர் ஓமர்சன் தெரிவித்தாவது,

சமாதானப் பேச்சுக்களுக்கான ஒரு சுமுக நிலையை தோற்றுவிக்கும் பொருட்டு தற்காலிகமாகவேனும் யுத்த நிறுத்தமொன்றை அமுல்படுத்த இருதரப்பும் முயற்சிக்க வேண்டுமென அவர் கூறினார்.

இருதரப்புக்குமிடையில் தடைப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## சமுர்த்தி அதிகாரி சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறை அக்கரைப்பற்றில் சமுர்த்தித் திணைக்கள அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்தின் சமுர்த்தி அதிகாரியாகப் பணியாற்றிய மாணிக்கம் தர்மலிங்கம் (வயது-47) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவர்.

நேற்று முன்தினமிரவு சுடப்பட்ட அவர் உடனடியாக அக்கரைப்பற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனளிக்காமல் அவர் உயிரிழந்துள்ளார். (ச - 5)

## ஆயிரம் பயணிகளை ஏற்றிய கப்பல் இன்று யாழ். வருகிறது

(வவுனியா)

வவுனியா மற்றும் மன்னாரைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் இன்று கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அழைத்து வரப்படவுள்ளனர்.

பதிவு செய்யப்பட்ட ஆயிரம் பயணிகள் இன்று காலை 8 மணிக்கு வவுனியா மாவட்ட செயலகத்திலிருந்து திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இவர்கள் எரிபொருள் உட்பட சில பொருள்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.வரும் பயணிகளில் 800 பேர் வவுனியா மாவட்ட செயலகத்தில் பதிவு செய்யப்பட்டவர்கள் என்றும் ஏனையவர்கள் மன்னாரைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. விசேட பஸ்கள் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்படும் இவர்கள் இன்று மாலை புறப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## முகமாலையில் தொடரும் பரஸ்பர தாக்குதல்கள்!

(யாழ்ப்பாணம்)

முகமாலை பகுதியில் நேற்றுக் காலை இராணுவத்தினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பரஸ்பரம் ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து தகவலில்லை.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி படையினர் பல்குழல் ஏறிகணை, மோட்டார் மற்றும் ஆட்லறிச் ஷெல் தாக்குதலை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகளும் பதிலுக்கு முகமாலை இராணுவ முன்னரங்க காவலரண்களை இலக்கு வைத்து மோட்டார் மற்றும் ஆட்லறி ஷெல் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று அதி

(04 ஆம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்


### கௌளி நூல்

எம்மிடம் முழந்தபடி கௌளி நூல் உள்ளது. தேவையானோர் பெற்றுக் கொள்ளவும். ஒரு நூலின் விலை ரூ.12/=. தா.வாசுதேவக் குருக்கள், கோண்டாவில் மேற்கு. (467)


## க.பொ.த.(உ/த) பரீட்சை முடிபுகள்

### வடமராட்சி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

*விஞ்ஞானப் பிரிவு*

கலைவாணி கமலக்கண்ணன் 3ஏ, விஜிதா மார்க்கண்டு ஏ 2பி, கார்த்திகா சின்னராஜா பி 2சி,

*வணிகப்பிரிவு*

ஹேமலதா சித்திரவேல் ஏ பி சி

*கணிதப்பிரிவு*

ரத்னாதேவி ரங்கநாதன் ஏ பி சி, சஞ்சுதா கனகசபாவதி பி சி எஸ்

*கலைப்பிரிவு*

ஜேசுராஜீ பிரான்சிஸ்சேவியர் 2ஏ பி

சிவகௌரி நவரட்ணம் ஏ 2பி , கிருத்திகா தவராஜா 2ஏ எஸ்

### சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

*கலைப்பிரிவு*

அனெட்வினி சில்வெஸ்டர் 3ஏ, டிங்னா பேர்க்மனஸ் 3ஏ

*கணிதம்*

சுவேதா பாலசுப்பிரமணியம் 2ஏ பி

*விஞ்ஞானப் பிரிவு*

துவாரகா மகேந்திரன் 2ஏசி

*வர்த்தகப்பிரிவு*

தட்சிகா ஜெயபாலசந்திரன் ஏ 2பி,சின்ஸ்கா டயோனியஸ் ஏ 2பி, ஜீவிதா தேவராஜா ஏ 2பி

### சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

*கலைப்பிரிவு*

மா.சுபாஸ்கரன் 2ஏ சி, ந. தீபருக்சன் 2ஏ எஸ், கு.சசிக்குமார் ஏ 2சி, சி.பிருந்தா ஏ 2சி

*வணிகப் பிரிவு*

சோ. பிருந்தா 2ஏ பி, மு.கீத்தா ஏ சி எஸ். (சு-133)

## யூனியன் கல்லூரி மாணவர்களுக்கு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை தனியார் கல்வி நிறுவனங்களில் நடாத்துவ தற்கு தற்காலிகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதிபர் எஸ். புண்ணியசீலன் அறிவித்துள்ளார்.

யூனியன் கல்லூரி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ளதால் தற்போதைய சூழ்நிலையில் பாடசாலையை அங்கு இயக்க முடியவில்லை. இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கான தற்காலிக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதிபர் தெரிவித்தார்.

நாளை முதல் பின்வரும் ஒழுங்கில் குறிப்பிட்ட மாணவர்கள் குறித்த இடங்களில் காலை 8.00 மணிக்கு பாடசாலைச் சீருடையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

6, 7,8 ம் தரங்கள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, 9, 10, 11ம் தரங்கள் சுன்னாகம் விஸைஸ் கல்வி நிலையம், க.பொ.த.(உ/த) கலைப்பிரிவு சுன்னாகம் சி.சி.ஏ கல்வி நிலையம், க.பொ.த (உ/த) வர்த்தகப் பிரிவு சுன்னாகம் ஸ்ரார் கல்வி நிலையம், க.பொ.த (உ/த) கணித, விஞ்ஞானப் பிரிவு மல்லாகம் ஏ.ஏ. ரி கணனிப் பயற்சி நிலையம் என அதிபர் அறிவித்துள்ளார். (சு)

## தொழில் நுட்பக் கல்லூரியில் விசேட இறுதிப் பரீட்சை

தொழில் நுட்பக் கல்லூரியில் 2005 ஆம் ஆண்டுக்குரிய விசேட இறுதிப் பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப் படவுள்ளதாக அதிபரும் பிரதிப் பிராந்திப் பணிப்பாளருமான ந.யோகராஜன் அறிவித்துள்ளார்.

வர்த்தக பீடம், தொழில் நுட்ப பீடம், பொறியியல் பீடத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் தமக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட நேர அட்டவணையின் ஒழுங்கினைப் பின்பற்றுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

2006 ஆம் ஆண்டுக்குரிய இறுதிப் பரீட்சை இலங்கை முழுவதும் டிசம்பர் மாதம் தொடங்க இருப்பதால் அதற்கு ஒருமாதத்திற்கு முன்பதாக 2005 ஆம் ஆண்டுக்குரிய விசேட பரீட்சைகளை நடத்தி பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடும் வண்ணம் தலைமை திணைக்களத்தின் பரீட்சைப் பகுதியினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்டபீடி பரீட்சை நடைபெறாதுவிடின் 2005 ஆம் ஆண்டுக்குரிய விசேட பரீட்சை தானாகவே காலாவதியாகிவிடும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொள்ளும்படி வேண்டப்படுகிறீர்கள்.

அதேபோல் வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள மாணவர்கள் யாழ்.தொழில் நுட்பக் கல்லூரிப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகிறீர்கள் எனப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (சு)

## அரையிறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் 2006 ஆம் ஆண்டிற்கான 2ம் அரை இறுதிப் பரீட்சை டிசம்பர் மாதம் 04 ஆம்திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பத்தை இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு பணிப்பாளர் வே. கருணாநிதி அறிவித்துள்ளார். அனைத்து மாணவர்களும் விண்ணப்பப் படிவத்தை நிறுவனத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.(சு)

## தபால் விநியோகம்

திருமலையிலிருந்து கப்பல் மூலமாக யாழ். குடா நாட்டிற்கான 535 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டு கடந்த சனிக்கிழமை யாழ். தபால் திணைக்களத்தில் கையளிக்கப்பட்டது.

இப்பொதிகளின் ஒரு தொகுதி நேற்று விநியோகிக்கப்பட்டதாகவும் ஏனைய பொதிகள் இன்று விநியோகிப்படவுள்ளதாகவும் யாழ் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதே வேளை கடந்த கால சூழ்நிலையால் குடாநாட்டில் தபால் முத்திரைகள் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை தொடர்ந்து யாழ். தபால் திணைக்களம் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக 12 இலட்சம் ரூபா பெறுமதியான பல்வேறு பெறுமதியுள்ள முத்திரைகள் விமானம் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் யாழ். தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து தபால் பொதிகளைக் கொண்டு சென்றஇரண்டு தபால் ஊழியர்களும் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்படாத நிலையில் திருகோணமலையில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டது. (சு-133)

## சடலத்தை பொறுப்பேற்க பணிப்பாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் பெயர், முகவரி, வயது, எதுவும் தெரியாத நிலையில் 80 வயது மதிக்கத்தக்க ஆண் வயோதிபர் ஒருவர் தலையில் காயத்துடன் கடந்த 7ஆம் திகதி அனுமதிக்கப்பட்டு நேற்று இறந்துள்ளார்.

இவருடன் தம்பிப்பிள்ளை பஞ்சாட்சரம் , சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய அடையாள அட்டை காணப்பட்டது. எனவே இவரது உறவினர்கள் யாரும் வந்து இவரது சடலத்தை அடையாளம் காட்டி உடன் பொறுப்பேற்குமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (சு)

## இராணுவ நடவடிக்கைகளை ...

இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் நேற்றுக் காலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கு அரசு தயாராகவேயிருக்கிறது. இதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை என எடுத்துரைத்துள்ள ஜனாதிபதி, தொடர்ச்சியாக வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளை வன்முறைகளைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்புவதற்கான அழுத்தங்களை இணைத்தலைமை நாடுகள் பிரயோகிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் ஊடக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

இதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப்புலிகள் படையினர்மீது தாக்குதல்களை நடத்துகின்றபோது அரச படைகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தற்காலிக தாக்குதல்களை அதாவது பதில் தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திலிருக்கின்றன.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முன்னெடுப்பதற்காகவே அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது.அத்துடன் மனித உரிமை மீறல்களை கண்டுபிடிப்பதற்கான ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதுடன் வெளிநாட்டு அவதானிப்பாளர்களையும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு அமைவாகவே அரசின் இவ்விரு நடவடிக்கைளும் அமைந்திருக்கின்ற என்று இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் பாராட்டியுள்ளனர்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், அரச சமாதானத்தின் பிரதிநிதிகள், முன்னாள்ஐ.நா. முகவர்களான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுடன் தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்ற மனிதாபிமான செயற்பாடுகளையும் ஜனாதிபதி பாராட்டியுள்ளார் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் இணைத் தலைமை நாடுகளின் சார்பில் அமெரிக்கத் தூதுவர் றொபர்ட் ஓ பிளேக், நோர்வேத் தூதுவர் ஹான் பிறட்ஸ்கர், ஜேர்மன் தூதுவர் ஜுவர்ஜன் வீத், ஐரோப்பிய யூனியன் பிரதிநிதி ஜுலியன் வில்சன், யப்பான் தூதுவர் கியோசி அராக்கி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அலரி மாளிகையில் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க, மகிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகாரச் செயலாளர் ஏ.எச்.எம்.ஜி.எஸ்.பலிகக்கார, திறைசேரிச் செயலாளர் பி.பி.ஜயசுந்தர மற்றும் சமாதானச் செயலகத்தின் தலைவர் கலாநிதி பாலித ஹோகன்ன ஆகியோரும் கலந்து கொண்டனர். (சு-5,10)


## 45 ஆம் நினைவு தினம்

11.10.2006

பிறப்பு 16 02 1953

இறப்பு 28 08 2006



### செல்லத்துரை கோபாலசிங்கம்

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் சுப்பர் மடம் பருத்தித்துறையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டபருத்தித்துறை ஆத்தியடி பிள்ளையார் கோவிலுக்குஅருகில் வசித்து வந்த,

செல்லத்துரை கோபாலசிங்கம் அவர்களின் 45 ஆவது நினைவு தினமும்ஆத்மசாந்திக் கிரியைகளும் நாளை 11.10.2006 புதன்கிழமை பகல் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதை த் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆத்தியடி பிள்ளையார் கோவில் அருகாமை, பருத்தித்துறை. (C-515)

மனைவி, பிள்ளைகள் சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்



## கலாலயா

பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

- கேக் ஐஸிங் • கூந்தல் அலங்காரம் • உணவு. தயாரித்தல் • Fabric Painting • பூ வேலை • கைவேலை } 2 மாதம்
- Facial • சாறி பிளவுஸ், பஞ்சாபி தைத்தல் - 2 வாரம்
- புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான தையல் வகுப்புகள் - 6 மாதம்

கிழமை நாள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.

புதிதாகச் சேர விரும்பும் மாணவிகளுக்கும் அனுமதி வழங்கப்படுகின்றன.

மேலும் விபரங்களைவெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 2.00 மணி வரை அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.

எந்தக் காலத்திலும் புயற் காற்றினாலும் பூமி அதிர்ச்சியினாலும் அழிந்தவற்றை விட வீடுகளும் நகரங்களும் அரசுகளின் கைகளினாலேயே அதிகமாக நாசம் அடைந்து இருக்கின்றன. -ஆவ்பரி

வலம்புரி

# பேராசிரியர் பீரிஸின் உள்நோக்கம் தெரிகிறது

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இராணுவ நடவடிக்கை தேவையானது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் கூறியுள்ளார்.

பயங்கரவாதத்தை இராணுவ நடவடிக்கை மூலம் ஒழிக்க வேண்டும் என தற்போது நாட்டு மக்கள் விரும் புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பயங்கரவாதம், விடுதலைப் போராட்டம், தீவிரவாதம் இவற்றிற்கான வரைவிலக்கணங்களை வகுப்பதில் மொழியியல் வல்லுநர்கள் ஈடுபட வேண்டும் என்பதற்கு அப்பால் பயங்கரவாதத்தை ஒழிப்பதில் இராணுவ நடவடிக்கை தேவை என பேராசிரியர் பீரிஸ் கூறியிருப்பது. ஈழத்தமிழர்களை வேதனைப் படுத்தியுள்ளது.

'பயங்கரவாதம்' என்ற சொல்பதத்தை பேராசிரியர் பீரிஸ் பயன்படுத்தினார் என்பதுவே தமிழர்களை வேதனைப்படுத்திய விடயமாகும்.

பேராசிரியர் பீரிஸுக்கு ஈழத்தமிழர் மத்தியில் ஓர் காத்திரமான மதிப்பு உண்டு. அந்த மதிப்பை இழக்கும் வகையில் அவர் நடந்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில், அமைச்சராக இருந்த பேராசிரியர் பீரிஸ் அப்போது இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றை தயாரித்து இருந்தார்.

நீதி, நிதி, நிர்வாகம், பாதுகாப்பு, காணி உள்ளிட்ட விடயங்களில் தமிழ் மக்களுக்கான அதிகாரங்கள் அவரின் தீர்வுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டிருந்தன எனினும் அதனை அப்போதைய ஆட்சியாளர்களும் எதிர்க்கட்சிகளும் சின்னா பின்னமாக்கி விட்டன.

பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த பேராசிரியர் பீரிஸ் அரசியல் விவகார அமைச்சராகவிருந்து அரசின் பிரதிநிதியாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியவர்.

இறுதிவரை சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் எனக் கூறிய பேராசிரியர் பீரிஸ் தற்போது இந்தியா சென்றுள்ள நிலையில் பயங்கரவாதத்தை இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஒழிக்க வேண்டும் என இந்துப் பத்திரிகைக்குக் கூறியுள்ளார். இது அவரின் உள் ளார்ந்த உணர்வை வெளிப்படுத்துவதாகவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சியைக் கூட்டுச் சேர வைப்பதில் தீவிரமாக உழைத்த பேராசிரியர் இப்போது பயங்கரவாதம், இராணுவ நடவடிக்கை என்றெல்லாம் கூறியிருப்பது இரு பிரதான கட்சிகளின் கூட்டிணைவின் நோக்கத்தையும் மெல்ல வெளிப்படுத்துவதாகவிருக்கும்.

# மக்களின் குறைகளைத் தீர்க்க 'மக்கள் குறைகேள்' பிரிவு ஆரம்பம்

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் மக்கள் குறைகேள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதன் நிர்வாக உத்தியோகஸ்தர் சி.சோதிநாதன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

அனர்த்த இடப்பெயர்வு, உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு, வருமானப் பற்றாக்குறை, விவசாய மீன்பிடித் தொழில்களின் பாதிப்பு, போக்குவரத்துச் சீர்இன்மை போன்ற விடயங்களினால் மக்கள் வாழ்க்கை அவலமாகிவிட்டது. பங்கீட்டு அடிப்படையில் மக்கள் உணவு பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறைப்பதற்காக வழிவகுக்கும் நோக்கில் இப்பிரிவு செயற்படும். குறைகளைத் தெரிவிக்க விரும்புவோர் எமது குறைகேள் அலுவலகப் பிரிவுடன் கடிதம் மூலமாகவோ நேரடியாகவோ தொடர்புகளை மேற்கொள்ளுமாறும் நேரடியாக தொடர்புகளை மேற்கொள்பவர்கள் எழுத்து மூலமான முறைப்பாட்டுடன் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 9 - மாலை 4மணிவரை யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் இல.40,கோவில், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள தலைமையலுவலகத்தில் குறைகேள் அலுவலகரை சந்திக்கலாம்.

தெரிவிக்கப்படும் குறைகள் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டுத் தீர்வுக்கு வழிகோர முயற்சிக்கப்படும். இதன்பொருட்டு பிரதேச செயலர் ரீதியாக மூன்று பிரதிநிதிகள் நியமிக்கப்படவுள்ளார்கள்.

அவர்கள் பிரதேச செயலர் மட்டக் கூட்டங்களில் மக்களால் தெரிவிக்கப்படும் குறைகளைக் கூறி தீர்வு காண்பதற்கு முயற்சிசெய்வர்.

நேரடியாகத் தலைமையலுவலகத்திற்குச் செல்வதற்கு சிரமங்கள் இருப்பின் கீழ்க்குறிப்பிட்டுள்ள அங்கத்துவ நிறுவனங்களின் காரியாலயங்களில் முறைப்பாடுகளை எழுத்து மூலம் தெரிவிக்கலாம் எனவும் அவர் கூறினார்.

வடமராட்சி வாழ் மக்கள்,(ஊற்று நிறுவனம், அல்வாய் கிழக்கு, அல்வாய். தொ.பே.இல.226 4505/4033), தென்மராட்சி வாழ் மக்கள்(அறவழிப்போராட்டக் குழு, நுணாவில் சந்தி, கைதடி, சாவகச்சேரி), நல்லூர் பிரதேச வாழ் மக்கள் (சமூக அபிவிருத்தி மன்றம் 109 பருத்தித்துறை வீதி நல்லூர். தொ.பே.இல.-222 3218),

வலி.கிழக்கு வாழ் மக்கள்(மக்கள் நலன்காக்கும் பிரிவு இருபாலை சந்தி கோப்பாய்), யாழ்.பிரதேச வாழ் மக்கள் (மனித முன்னேற்ற நிலையம்,தியோகு ஒழுங்கை, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல.222 2571/222 7314), வலி.மேற்கு காரைநகர் வாழ் மக்கள்(சிறுவர் கல்விக்கும் பால் நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் ,மூளாய், சுழிபுரம் தொ.பே.இல.-060 222 13293), தீவக மக்கள் (வடஇலங்கைச் சர்வோதயம், புங்குடுதீவு-3. தொ.பே.இல.07123 47558). (ச)

# தடைப்பட்ட கல்வியை சீரமைக்க ஆசிரியர்களின் முயற்சி அவசியம்

குடாநாட்டில் தடைப்பட்ட கல்வியினை சீரமைத்து மாணவர்களை பூரண நிலைக்கு கொண்டுவர ஆசிரியர்களின் தீவிர முயற்சி அவசியமாகின்றது என தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

குடாநாட்டு மாணவர்களின் கல்விநிலை என்பது தொடர்ந்தும் பாதாளத்தினை நோக்கிச் செல்கின்றது. எரிபொருளின்மை,மின்சாரமின்மை,பட்டினி போன்ற காரணங்களும் மாணவர்களைப் பாதிக்கின்றது. இந்த நிலையில் பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்களுக்கு உகந்த சூழ் நிலை, நலம் மிக்க மனநிலையை ஏற்படுத்த உள்ளூர் தொண்டு நிறுவனங்கள் உதவி செய்ய வேண்டும்.

அத்துடன் ஆசிரியர்கள் மாணவர்களின் நிலையுணர்ந்து தீவிர முயற்சியுடன் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும். தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலை கல்வி நடவடிக்கை தொடர்பான நேரங்களுடன் முரண்படாத வகையில் நிறுவனங்களை இயக்கி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உயரிய பங்களிப்பை வழங்க வேண்டும். அத்துடன் சமூகத்தில் உள்ள வறிய மாணவர்களையும் இணைந்து சலுகையுடன் கூடிய கற்றலினை வழங்க வேண்டும்.

எதிர்வரும் க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு விசேட கவனத்துடன் கூடிய கற்றலினை மேற்கொண்டு சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள உதவுமாறு வேண்டுகின்றோம் என அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அரசாங்கம் கடும் கண்டனம்

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையில் ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானம் கொண்டு வந்தமைக்கு அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியதாவது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தின் இறுதி நாள் மாநாட்டில் மனித உரிமை மீறல்கள், கடத்தல்கள், படுகொலைகள் தொடர்பாக இலங்கைக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானம் கொண்டு வந்தது.

எம்மைக் கலந்து ஆலோசிக்காமல் ஐரோப்பிய ஒன்றியம் இம்முயற்சியை மேற்கொண்டது. இந்தச் சூழ்நிலை விரும்பத்தக்கதும் அல்ல. 14 பேர் காணாமல் போனது தொடர்பாக விசாரணை நடத்த மகிந்த ராஜபக்ஷ சுயாதீன விசாரணை ஆணையத்தை நியமித்திருக்கிறார்.

மூதூர் அரச சார்பற்ற பணியாளர்கள் படுகொலை தொடர்பான விசாரணைக்கு நாம் ஒத்துழைப்பு அளிக்கிறோம். இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் அத்தகைய ஒரு தீர்மானத்தை முன்வைக்க வேண்டிய தேவையில்லை.

இந்தியா, இணைத்தலைமை நாடுகள் ஆகியவை கூட இந்தத் தீர்மானத்தை எதிர்த்துள்ளன. இந்த பிரச்சினைகளில் அரசாங்கத்தின் செயற்பாட்டை கருத்தில் கொண்டு இந்தியாவும் இணைத் தலைமை நாடுகளும் இத்தீர்மானம் தொடர்பில் விலகி நின்றுள்ள என்றார் மகிந்த சமரசிங்க.(ச-5)

# தேங்காய்ப் பால் மா பைக்கற் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒவ்வொரு பைக்கற் பால்மா ஒதுக்கீடு செய்து, பலநோக்கு சங்கங்களினூடாக வழங்கப்படுவதாக அரசஅதிபர் அறிவித்துள்ளார்.

இதைவிட தேங்காய்ப்பால்மா , தீப்பெட்டி, மெழுகுதிரி, சவர்க்காரம்,பற்பசை, உள்ளி, மீன்ரின், பயறு மற்றும் உழுந்து போன்றவற்றையும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கான வழங்கல் கட்டளைகளை இன்று காலை 10 மணி தொடக்கம் யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க செயலகத்தில் பெற்று விநியோகிக்குமாறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## க.பொ.த.உயர் தரப் பரீட்சை

# பெறுபேறுகள் யாழ். வந்தன

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டுப் பாடசாலைகளுக்கான க.பொ.த.உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள் விசேட விமானம் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

இப் பரீட்சைப் பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வெளிவாரியாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பெறுபேறுகள் இன்றுமுதல் தபால் மூலம் விநியோகிக்கப்படவுள்ளது.

கடந்த ஆறாம் திகதி இணையத்தளத்தின்மூலம் உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (ச-133)

# இரு தரப்புத் தாக்குதல்கள் தொடர்ந்தால் இணைத்தலைமைகள் கடும் முடிவெடுக்கும்

## அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் எச்சரிக்கை

இராணுவச் செயற்பாடுகளை இரு தரப்பும் தொடர்ந்தும் மேற்கொண்டால்இணைத் தலைமைகள் எதிர்காலத்தில் இறுக்கமான முடிவுகளை எடுக்கும் என அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்புக் குறித்து கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். சமாதானப்பேச்சுக்களை குறிப்பிட்டபடி இம் மாத இறுதியில் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு இரு தரப்பும் உடனடியாக அனைத்து விதமான இராணுவ நடவடிக்கைகளையும்நிறுத்திக் கொள்ள வேண்டுமென அமெரிக்கத்தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்களை நடாத்துவதற்காக திகதி குறிப்பிடப்பட்ட பின்னர் இரு தரப்பும் புதிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளமை குறித்து தமது விசனத்தையும் தெரிவித்துள்ளார்.

இராணுவச் செயற்பாடுகளை இருதரப்பும் தொடர்ந்து மேற்கொண்டு வந்தால் இணைத்தலைமைகள் எதிர்காலத்தில் இறுக்கமான முடிவுகளை எடுக்கும் என ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பேச்சுகளுக்கான இடம் மற்றும் திகதி குறித்த பிந்திய நிலைமை தொடர்பாகவும் சமாதானப் பேச்சுக்களின் போது அரசாங்கம் பேசுவதற்காக முன்வைக்கவுள்ள முயற்சிகள் தொடர்பாகவும் நேற்றைய ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.இதேவேளை நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் இன்று கிளிநொச்சி சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கும்போது இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியுடனான பேசிய எட்டப்பட்ட முடிபுகளும் இணைத் தலைமை நாடுகளின் முடிபும் தெரியப்படுத்தப்படும் என்றார். (ச-5,10)

# வந்தாறுமூலையில் கிளைமோர் தாக்கு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு வந்தாறு மூலையில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வந்தாறுமூலைத்தீவு வீதியில் நேற்று காலை 10.30 மணியளவில் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த கொம்மாந்துறை இராணுவத்தை இலக்கு வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஆர்.டபிள்யூ. எஸ்.எஸ். ரத்னநாயக்க(வயது - 26) என்பவர் படுகாயமடைந்த நிலையில் பொலநறுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் 30 நிமிடத்துக்கும் மேலாக கிளைமோர் தாக்குதலை நடத்தியோருக்கும் இராணுவத்தினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச - 5)

# உரிமை கோரப்படாத சடலம் புதைப்பதற்கு இட ஒதுக்கீடு

## யாழ்.மாநகர சபை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத சடலங்களை புதைப்பதற்கென யாழ்.பண்ணைப்பகுதியில் உள்ள சேமக்காலையின் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உரிமை கோரப்படாத சடலங்களைப் புதைப்பதற்கான இடத்தைஒதுக்கித் தருமாறு யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம், யாழ்.மாநகரசபையிடம்விடுத்த வேண்டுகோளையடுத்து யாழ்.மாநகர ஆணையாளர் சரவணபவ மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக சேமக்காலையின் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநகர சபை மேற்பார்வையாளர் ஒருவர் கண்காணிப்பிலேயே உரிமை கோரப்படாத சடலங்கள் புதைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ந-133)

## அமைதிப்...

தனையற்ற பேச்சுக்களுக்கு செல்வதாகக் கூறியுள்ளது.

இது கடந்த அரச தலைவர் தேர்தலின் போது வெளியிடப்பட்ட மகிந்த சிந்தனைக்கு முற்றாக எதிரானது. மகிந்த சிந்தனையின் படி பேச்சுக்கள் மீளத் தொடங்கப்பட வேண்டுமானால் விடுதலைப் புலிகள் ஈழக் கோரிக்கையை கைவிட வேண்டும். ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்.

தற்போதைய பேச்சுக்களானது நமது இராணுவ வெற்றிகளிலிருந்து விலகிச்செல்லவே உதவும் என்று ஜே.வி.பியின் மத்திய குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தற்காலிக...

பொருட்டு இருதரப்பும் இணக்கப்பாட்டை பெற்றுக் கொண்டு நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஹான்சன் பௌயர் விடை பெற்றுச் செல்லும் முன்னரே மீண்டும் தாக்குதல்களிலும் மோதல்களிலும் இரு தரப்பினரும் ஈடுபட்டுள்ளமை கண்காணிப்புக்குழுவை மிகுந்த கவலை அடையச் செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம் என வெறுமனே வார்த்தைகளை கூறிக் கொண்டிருக்காமல் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டவர்களாக அதற்கான ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவர்களாக இரு தரப்பும் மோதல்களில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும் என்றார்.

மோதல் சம்பவங்கள் தொடர்பாக ஒருவரையொருவர் குற்றம்சாட்டுவதை விடுத்து முற்றாக யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும். அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க சர்வதேச சமூகமும் நோர்வேயும் மேற்கொண்ட கடினமான பணியை புரிந்து கொண்டு இருதரப்பும் விட்டுக் கொடுப்புடன் நடந்து கொண்டாலே முயற்சிகள் வெற்றியளிக்கும் என்றார். (ச)

## முகமாலையில்...

காலை 5 மணியளவில் ஆரம்பமான இந்த பரஸ்பர ஷெல் தாக்குதல்கள் காலை 9 மணிவரை நீடித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதல்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான பளை, இயக்கச்சி, செம்பியன்பற்றில் வீழ்ந்து வெடித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்குப் பதிலடியாக முகமாலை இராணுவ பாதுகாப்பு முன்னரங்க காவல் நிலைகளி லிருந்து படையினர் மீண்டும் ஷெல் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதல்கள் மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலேயே வீழ்ந்து வெடித்ததாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளர் தயாமாஸ்டர் தெரிவித்துள்ளார். (ச-5)


PATRICIAN INSTITUTES

பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

ஆரம்பம்:-16-10-2006

| | |
|---|---|
| A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION 1 YEAR |
| B. DIPLOMA IN MICRO SOFT OFFICE | DURATION 6 MONTHS |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3 MONTHS |
| D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING | DURATION 4 MONTHS |
| E. DIPLOMA IN DEST TOP PUBLISHING | DURATION 6 MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. | DURATION 3 MONTHS |
| G. INTERNET & E-MAIL | DURATION 1 MONTHS |
| H. DIPLOMA IN INTERNET TECHNOLOGY | DURATION 5 MONTH |

வாகனத் தகுதிச் சான்றிதழ் 2006

2006 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் தை மாதம் தொடக்கம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதனை அனைத்து வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

CERTIFICATE COURSES

| | | |
|---|---|---|
| 1.MS WORD-2000 | 6.PASCAL | 11.d BASE FOR WINDOWS |
| 2.MS EXCEL-2000 | 7.d BASE III+ | 12.PHOTO SHOP DELUX |
| 3.MS ACCESS-2000 | 8.PAGE MAKER | 13.ADOBE PHOTO SHOP |
| 4.MS POWER POINT | 9.WINDOWS 95 | 14.QUICK BOOK |
| 5.VISUAL BASIC VER 6.5 | 10.COREL DRAW | |

EACH 3 MONTHS

| | |
|---|---|
| 1.சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (PITMAN LONDON EXAM PAPER மாதிரி வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 2.சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| 3.மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol & diesel வாகனங்களின் இலகுவான செய்முறை மூலம் கற்பிக்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 4.ஜெனரல் எலக்ரிஸன் (மின்சார இணைப்பு மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| 5.வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் (Oscilloscope) (அசைவுகாட்டி) இனை கையாள்தலுடன் கூடிய முழுமையான பயிற்சியும் செயன்முறையும்) | காலம் 8மாதங்கள் |
| 6. கடைச்சல் இயந்திர தொழிற் பயிற்சி (ON THE JOB TRAINING) வழங்கப்படும் | காலம் 3 மாதங்கள் |
| 7.மின் ஒட்டுநர் பயிற்சி (ARC WELDING & GAS WELDING ON THE JOB TRAINING) வழங்கப்படும் | காலம் 6 மாதங்கள் |
| 8.மரவேலை (With use of Machinery) (ON THE JOB TRAINING) வழங்கப்படும் | காலம் 6 மாதங்கள் |
| 9.குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |
| 10.PLUMPING | காலம் 6 மாதங்கள் |
| 11.MASONARY | காலம் 6 மாதங்கள் |

குறிப்பு:

1.பயிற்சிக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தலாம்.

2.வன்செயலால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ்வாழும் மாணவர்கள் ஆதாரங்காட்டி பங்குக்குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெறலாம்.

3.பயிற்சிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

REGISTRAR PATRICIAN INSTITUTE 59,ST.PATRICK'S ROAD, JAFFNA

T.P NO:021 222 6148 Fax:021 222 6148

E.Mail:SPitee@Slt.net.lk


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.